# 2020 - மநில மாநாட்டு அறிக்கை

## பேரன்பு கொண்ட உரிமை குரல் உறவுகளே !

## ஓட்டுநர் சமுதய சொந்தங்களே !!

உங்கள் அனைவர் மீதும் ஏக இறைவனின் சாந்தியும் சமாதானம்மும் என்றும் நிலவட்டுமாக...

இன்று சென்னை முதல் குமரி வரை ஓட்டுநர்களின் போர் குரலாய் கம்பீர நடை போட கூடிய உரிமை குரல் ஓட்டுநர் தொழிற்சங்கம் முதன் முதலில் சென்னையில் துவங்கப்பட்டது. அன்றைக்கு நமது சங்கத்தின் பெயர் ஓலா உபேர் ஆல் பாதிக்கப்பட்டோர் குழு அ.ஜாஹிர் ஹுசைன், I.தீபு பாட்ஷா, L.விமல், P.சுதாகர், ஹர்சன் பாபு, பிரகாஷ், கோபி, முரளி ஆகிய எட்டு நபர்கள் தான் இந்தக் குழுவை உருவாக்கினார்கள் இவர்கள் சங்கத்தில் இல்லாத பல்வேறு ஓட்டுநர்களை குழுவாக இணைந்து மற்றும் சில சங்கங்களில் கருத்து வேறுபாடுகள் காரணமாக இருந்தவர்களையும் இணைத்து அவர்களுக்கான தேவைகளை பூர்த்தி செய்யும் விதமாக பணிகளை தொடங்கினார் அப்போது ஓட்டுநர்களின் ஒருங்கிணைப்பிற்க்காக சமூக செயல்பாட்டாளரும் இந்திய தேசிய லீக்கின் அன்றைய சென்னை மண்டல செயலாளருமான ஷேக் மைதீன் மற்றும் N.K. அக்பர் அலி அவர்கள் தலைமையில் 8 பேர் கொண்ட அந்த குழு தாம்பரம் அலுவலக்கத்தில் 2016 ல் முதல் ஆலோசனையில் ஈடுபட்டது அதன் பின்பு அடுத்த இரண்டு தினங்களில் ஓட்டுநர்களின் பிரச்சினைகளை மனுவாக தயார்செய்து சங்க காப்பாளர் பஷீர் அகமது அவர்களின் ஏற்பாட்டில் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மாண்புமிகு நிலோபர் கபில் அவர்களை தமிழக தலைமைச் செயலகத்தில் சந்தித்து மனு அளித்தோம்.

## முதல் காவல் நிலைய பேச்சுவார்த்தை.

ஓட்டுநர்களின் பிரதான பிரச்சனையாக சென்னை முழுவதும் தலைவிரித்தாடியது ஓலா உபேர் கார்ப்பரேட் நிறுவனங்களின் அட்டூழியம் இதில் முதல் பிரச்சனையாக நமது குழுவிற்கு காதில் பட்ட விஷயம் ஓலா அலுவலகத்தின் வாசலில் குரு என்ற ஓட்டுநர் ஓலா வில் பணிசெய்யும் பணியாளர்களால் தாக்கப்பட்டார் காவல் நிலையத்தில் அந்த ஓட்டுநருக்கு உதவுவதற்க்கு கூட யாரும் இல்லை அவர் புகாரும் காவல் நிலையத்தில் ஏற்க்காபட வில்லை என்ற சம்பவத்தை கேள்விப்பட்ட நமது குழு கிண்டி காவல் நிலையம் விரைந்தது சென்றது (அன்றைய சூழ்நிலையில் காவல்துறையினரிடம் பேசக்கூட ஓட்டுநர்கள் பயந்து கொண்டு இருந்த நேரம் அது) நமது குழு விரைவாக செயல்பட்டு காவல் நிலையத்தில் முதல் கட்ட பேச்சுவார்த்தையில் ஈடுபட்டது அப்போது இந்த சாதாரண

விஷயத்திற்கெல்லாம் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது என்ற போக்கில் பேசிய காவல் நிலைய அதிகாரிகளிடம் உரிய அழுத்தம் கொடுத்து ஓலா நிறுவன அதிகாரிகளை காவல் நிலையம் வரவழைத்து பல மணி நேர பேச்சுவார்த்தைக்கு பின்பு அன்றைய கிண்டி காவல் நிலைய ஆய்வாளர் தனசெல்வன் அவர்களிடமிருந்து **CSR** பெறப்பட்டது.

## <u>முதல் போராட்டாம்</u>

நமது குழுவை வலுப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த குழுவின் கூட்டம் இந்திய தேசிய லீக் கட்சியின் காஞ்சி மாவட்ட அலுவலகத்தில் (இன்றைய உரிமை குரல் ஓட்டுநர் தொழிற்சங்கத்தின் மாநிலத் தலைமை அலுவலகம்) தாம்பரத்தில் அன்று நடைபெற்றது அன்றைக்கு இருந்த ஓட்டுநர்களின் பிரச்சனைகளை, சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு அந்த கூட்டத்தில்தான் சட்டமன்றம் முன்பு பிச்சை எடுக்கும் போராட்டம் என்ற போராட்டத்தை நடத்த வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது சில தினங்களில் போராட்டத்திற்கான ஆலோசனை கூட்டம் அனைத்து ஓட்டுநர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டு மிகச் சிறப்பாக தாம்பரம் SGS மஹாலில் நடைபெற்றது அந்த ஆலோசனை கூட்டத்தில் கலந்துகொண்ட அன்றைய சங்கங்கள் நம்மை ஏளனமாகவும் கிண்டலாகவும் பேசினார்கள் நம்மை ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை (இன்று அந்த சங்கங்கள் இருந்த தடம் தெரியாமல் போய்விட்டன) யாருடைய ஆதரவும், எந்தவித முன் அனுபவமும் இல்லாத அந்த சூழ்நிலையில் நாம் அறிவித்தபடியே சட்டமன்றம் முன்பு பிச்சை எடுக்கும் போராட்டத்திற்கான ஏற்பாடுகளை செய்தோம் போராட்ட செய்தியை கேள்விப்பட்ட காவல்துறை அதிகாரிகள் நம்மை தொடர்பு கொண்டு இப்படி ஒரு போராட்டத்தை நடத்த உங்களுக்கு அனுமதி இல்லை என்றும் மீறினால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுவீர்கள் என்ற தோணியில் மிரட்டினார்கள் சூழ்நிலைகளை உணர்ந்து கொண்ட நாம் நமது சங்கத்தின் காப்பாளர் அல்ஹாஜ் M. பஷீர் அஹமது அவர்களை தொடர்பு கொண்டபோது அனைத்து உதவிகளையும் செய்து தருவதாகவும் இதுதொடர்பாக தாம்பரம் **J.**ஷேக் முகைதீன் மற்றும் **N.K.**அக்பர் அலி அவர்களையும் தொடர்பு கொண்டு விஷயங்களை எடுத்துக் கூற சொன்னார் போராட்டங்களை பின்வாங்கினால் நாம் இந்த களத்தில் ஒருபோதும் இருக்க முடியாது என்ற விஷயங்களை எடுத்துக் கூறினோம் சூழ்நிலைகளை புரிந்து கொண்ட அவர்கள் அன்றைய பூக்கடை காவல் துணை ஆணையர் சஷாங் சாய் மற்றும் உளவுதுறை அதிகாரிகளிடம் பேசி சென்னை ஆட்சியர் அலுவலகம் அருகில் பிச்சை எடுக்கும் போராட்டம் நடத்த இடம் ஒதுக்க ஏற்பாடு செய்து கொடுத்து போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே போக்குவரத்துத் துறை அமைச்சர் **M.R.**விஜயபாஸ்கர் அவர்களையும் உள்துறை செயலாளர் நிரஞ்சன் மார்டி IAS அவர்களையும் சந்தித்து நமது கோரிக்கைகள் குறித்து பேசுவதற்கான ஏற்பாடுகளை செய்து கொடுத்தனர் என்பதை இந்த நேரத்தில்

நன்றி கலந்த உணர்வோடு நினைத்துப் பார்க்க கடமைப் பட்டிருக்கின்றோம் ஏனெனில் அன்றைய சூழ்நிலையில் ஓலா உபேருக்கு எதிராக நடைபெற்ற ஓட்டுநர்களின் போராட்டங்களில் போக்குவரத்து துறை ஆணையரை பார்த்து பேசுவது கூட முடியாத காரியமாக இருந்த நேரம் அது நமது முதல் போராட்டம் போக்குவரத்து துறை அமைச்சர் மற்றும் உள்துறை செயலாளர் ஆகியோரிடம் பேச்சுவார்த்தை நடத்தினோம் என்ற மனநிறைவோடு அந்த போராட்டத்தில் கலந்து கொண்ட சிலநூறு ஓட்டுநர்கள் களத்தைவிட்டு விதைகளைத் தூவி நகர்ந்தோம்.

## <u>சங்கத்திற்க்கு பெயர் வைத்த முதல் செயற்குழு</u>

தன்னலமற்ற நமது செயல்பாடுகளை உற்று கவனித்த சங்க காப்பாளர் அல்ஹாஜ் M.பஷீர் அகமது அவர்கள் மற்றும் அண்ணன் J. ஷேக் மைதீன் ஆகியோர் நீங்கள் குழுவாக செயல்பட்டால் எந்த விஷயத்தையும் சாதிக்க முடியாது லட்டர் பேடு சங்கங்களுக்கு கிடைக்கும் மரியாதை கூட உங்களுக்கு கிடைக்காது அதே நேரத்தில் அரசு இதுபோன்ற குழுவிடமெல்லாம் பேச்சுவார்த்தைகள் நடத்தாதது சங்கங்களிடம் தான் பேச்சுவார்த்தைகள் நடத்தும் உங்களுடைய கோரிக்கைகளை வென்றெடுக்க வேண்டுமென்றால் முறையாக உங்களுக்கென ஒரு சங்கத்தை உருவாக்கி பதிவு செய்யுங்கள் என்று ஆலோசனைகளை எடுத்துக் கூறினார் அதன் பின்னர்தான் கோயம்பேடு ரோகினி தியேட்டர் பின்புறம் அன்றைய முதல் செயற்குழு கூட்டம் கூடியது அந்தக் கூட்டத்தில் தான் நமது சங்கத்திற்க்கு இ.சே.சுடர்வேந்தன் அவர்கள் உரிமை குரல் ஓட்டுநர் தொழிற்சங்கம் என்று பெயர் சூட்டினார் அதன் பின்புதான் அன்றைய கூட்டத்திலே சங்கத்தின் தலைவராக இ.சே.சுடர்வேந்தன்BTech., அவர்களும் சங்கத்தின் பொதுச்செயலாளராக அ.ஜாஹிர் ஹுசைன் ஆகிய நானும் சங்கத்தின் பொருளாளராக மு.இர்பான் MBA., அவர்களும் தேர்வு செய்யப்பட்டனர்.

சில தினங்களில் துணை தலைவர்களாக V.சக்திவேல் மற்றும் ஞானமூர்த்தி ஆகியோரும் துணைப் பொதுச் செயலாளர்களாக L.விமல் மற்றும் P.சுதாகர் மூத்த தலைவராக தேனிமுருகேசன் அவர்களும் தேர்வு செய்யப்பட்டு சங்கத்தை பதிவு செய்யும் பணிகள் துவங்கப்பட்டன ஆரம்ப காலகட்டத்தில் குறைந்த அளவே நிர்வாகிகள் செயல்பாட்டில் இருந்த காரணத்தினால் சங்கத்தைப் பதிவு செய்வதற்கு காப்பாளர் அவர்களிடம் இருந்துதான் ரூபாய் **15,000** பெறப்பட்டு பணிகள் துரிதப்படுத்தப்பட்டு **2018** ஆம் ஆண்டு சங்கம் பதிவு **532/KPM** எண்னை பெற்றது..

சங்கத்தை வலுப்படுத்தும் நோக்கில் சென்னை முழுவதும் உள்ள சாலைகளில் இறங்கி நமது சங்கத்தினுடைய நோக்கங்களையும் ஓட்டுனர்களுடைய பாதுகாப்பு களையும் வலியுறுத்தி சாலை சாலையாக சென்று புதிய உறுப்பினர்களை வாட்ஸ் அப் குழுக்களில் வாயிலாக சங்கத்தில் இணைக்கும் முயற்சிகளை தொடர்ச்சியாக மேற்கொண்டோம்

அந்த முயற்சி மிகச் சரியான முறையில் சங்கத்தின் வளர்ச்சிக்கு உதவியது..

## மறைந்த ஓட்டுனர் குடும்பங்களுக்கு ஆறுதல், உதவிகள்.

அந்த நேரத்தில் கடன் தொல்லையால் சென்னை ஐயபாக்கத்தில் பிரதாப் என்ற ஓட்டுநர் தற்கொலை செய்துகொண்டார் என்ற துயரச் சம்பவத்தை செய்தித்தாளில் படித்து நலம் விசாரிக்க அவர் இல்லம் தேடி நமது சங்க நிர்வாகிகள் உறுப்பினர்கள் சென்றனர் பின்னாளில் அவரது குழந்தைக்கு ஓர் ஆண்டிற்கான கல்வி உதவித் தொகையாக ரூபாய் 10000 வழங்கப்பட்டது இதில் ரூபாய் 7000 சங்க காப்பாளர் அவர்களிடமிருந்து பெறப்பட்டு உதவி செய்யபட்டது .

அடுத்தபடியாக **IT** ஓட்டுநர் கல்லுகுட்டை சார்ந்த குமார் பணியை முடித்து வீட்டிற்கு சென்று கொண்டிருக்கும்போது அவர் வசிக்கும் பகுதியில் போதை ஆசாமிகளால் தலையில் கல்லை போட்டு கொலை செய்யப்பட்டார் என்ற செய்தியையும் நாளிதழில் பார்த்து அதிர்ச்சி அடைந்து அவரது குடும்பத்திற்கு ஆறுதல் சொல்லவும் நலம் விசாரிக்கவும் அவர் இல்லம் தேடி சென்றோம் அந்த குடும்பம் பெற்ற ஒரே மகனையும் இழந்து அந்த வயதான தாய் தந்தையர் மிகுந்த கவலையோடு இருந்தனர் நம்மை பார்த்த அடுத்த சில நிமிடங்களில் கொலை வழக்கு என்பதால் ஆறுதல் கூற அவருடன் பணிபுரிந்த ஓட்டுநர்கள் கூட வரவில்லை என்று கண்ணீர் மல்க கூறினார்கள் நீங்கள் சங்கத்திலிருந்து வந்திருப்பது ஆறுதலாக இருப்பதாகவும் கூறினார்கள் அந்த வீட்டிற்கு அருகாமையில் இருந்த மற்றுமொரு ஓட்டுனர் இதுபோன்ற ஓட்டுனர்களுக்கு ஓடி வர கூடிய சங்கங்களும் இருக்கிறதா என்று ஆச்சரியமாக கேள்வி கேட்டார் அதன் பின்பு நாம் விசாரித்ததில் அந்த வயதான தாய் தந்தையருக்கு தன் மகன் கொலை செய்யப்பட்ட FIR காப்பியை கூட வாங்கி வைத்திருக்க வேண்டுமென்ற விஷயம் தெரியவில்லை இது சம்பந்தமாக காவல் துறை அதிகாரிகளிடம் பேசி அந்த குடும்பத்திற்கு FIR வாங்கி கொடுக்கப்பட்டது அதைத்தாண்டி கொலை செய்யப்பட்ட குமார் அவர்கள் ஓட்டிக்கொண்டிருந்த கார் தவனை கட்டாத காரணத்தினால் பைனான்ஸ் செய்த நிறுவனம் பறிமுதல் செய்ய முயற்சிகள் செய்து கொண்டிருந்தது அந்த நிறுவனத்திடம் பேசி லயபெல் இன்சூரன்ஸ் மூலம் அந்த வாகனத்தை சுமார் மூன்று லட்சம் ரூபாய்க்கு விற்று அந்த தொகையை அந்த ஏழைத் தாய் தந்தைக்கு ரூபாய் **2,80,000** கிடைக்க வழி செய்யப்பட்டது.

## லீசிங் மேளாக்கள் முற்றுகை போராட்டங்கள்.

இத்தகைய நமது செயல்பாடுகளை பார்த்தும் கேள்விப்பட்டும் நமது சங்கத்தில் அணியணியாய் ஓட்டுநர்கள் இணைய ஆரம்பித்தனர் அன்றைக்கு ஓட்டுனர்களுக்கு பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தியது ஓலா வின் லீசிங்

மேளாக்கள் இதனால் சொந்தமாக கார்களை வைத்து ஓட்டும் ஓட்டுனர்களின் வாழ்வாதாரம் பெருமளவில் பாதிக்கப்பட்டது ஓலா நிறுவனம் தனது சொந்த லீசிங் வாகனங்களுக்கு அதிக முன்னுரிமை கொடுத்துக் கொண்டிருந்தது இதை சுதாரித்துக்கொண்ட நமது நிர்வாகிகள், உறுப்பினர்கள் சென்னையில் தொடர்ந்து பல மாதங்களாக எந்த மண்டபத்தில் லீசிங் மேளா போடப்பட்டாலும் உடனடியாக முற்றுகையிட்டு அதை தடுத்தனர் இந்த காரணத்தினால் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஓலா வின் லீசிங் கார்கள் ஓலா வின் யார்டுகளில் தேங்கிக் கிடந்தன அதன்பின் ஓலா நிறுவனம் இன்று வரை சென்னையில் லீசிங் மேளாக்களை போடுவதை முற்றிலுமாக கைவிட்டது லீசிங் வாகனங்களின் எண்ணிக்கையும் மிகவும் குறைந்தது இந்தப் போராட்டத்தை உரிமை குரல் ஓட்டுநர் தொழிற்சங்கம் மட்டும்தான் தனியாக நடத்தி வெற்றி வாகை சூடியது

## <u>கொலைசெய்யபட்ட ஓட்டுனர்க்காக போரட்டாம், நிதியுதவி.</u>

திருவண்ணாமலையில் பாலசுப்பிரமணி என்ற ஓட்டுநர் வாடிக்கையாளரால் காட்டுப் பகுதியில் கழுத்து நெரித்து கொலை செய்யப்பட்டார் என்ற செய்தியைக் கேட்டு ஓலா நிறுவனம் முற்றுகை என்ற போராட்டத்தை அறிவித்தோம் அந்தப் போராட்டத்திற்கு வெளியூரில் இருந்து சென்னைக்கு பாலசுப்பிரமணியனின் தந்தையார் மற்றும் உடன் பிறந்த சகோதரரை வரவழைத்து ஓலா நிறுவனத்திடம் இழப்பீடு பேச்சுவார்த்தைகள் நடத்தினோம் அந்த போராட்டத்தில் இந்திய தேசிய லீக்கின் மாநில பொருளாளர் குத்தூஸ் ராஜா அவர்கள் கலந்து கொண்டு அந்த குடும்பத்திற்கு சங்க காப்பாளர் சார்பாக ரூபாய் 10000 நிதியுதவி அளித்தார் இந்த போராட்டத்தில் தான் மற்ற தொழிற்சங்கங்கள் முதல் முறையாக நம்முடன் கலந்து கொண்டனர் இந்தப் போராட்டத்தில் ஓலா நிறுவனத்திற்கு எதிராக கண்டன உரையாற்ற இந்திய தேசிய லீக்கின் J.ஷேக் மைதீன் அவர்களும் N.K.அக்பர் அலி அவர்களும் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் வழக்கறிஞர் காசி அவர்களும் CITU நிர்வாகிகளும் அன்றைய தமிழக ஓட்டுநர் நண்பர்கள் குழுவும் (இன்றைய அனைத்து வாழ்வுரிமை ஒட்டுனர்கள் தொழிற்சங்கம்) கலந்துகொண்டனர்

## <u>3 – ஜனவரி - 2017 நடைபெற்ற பிரம்மாண்ட போராட்டம்.</u>

இதன் பின்பு நமது சங்கம் ஒரு சீரான வளர்ச்சியை நோக்கி சென்றுகொண்டிருந்தது இந்த நேரத்தில் நம்மை அழைத்த CITU கால் டாக்ஸி தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் பூபதி அவர்கள் இந்த கார்ப்பரேட் நிறுவனங்களின் கொட்டத்தை அடக்க நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து மிகப் பெரிய வலுவான போராட்டத்தை நடத்த வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார் அவர் வேண்டுகோளை சற்றும் யோசிக்காமல் நாம் ஆமோதித்தோம் அதன் பின்பு அதற்கான களப் பணிகள்

துவங்கப்பட்டன அதன் பின்பு நடைபெற்ற கூட்டத்தில் சில சங்கங்கள் இந்த போராட்டத்தில் கலந்து கொள்வதில்லை என்று முடிவெடுத்தபோது அன்று ஒருங்கிணைந்த சிஐடியு, உரிமை குரல், வாழ்வுரிமை, தோழர்கள் சங்கம் ஆகிய தொழிற்சங்கங்கள் இன்று வரை பல்வேறு போராட்டங்களை கடந்து நான்கு ஆண்டுகளாக கூட்டமைப்பு சங்கங்களாக சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன பின் நாளில் அக்னிசிறகுகள் சங்கமும் கூட்டமைப்பில் இணைந்து கொண்டது இதுவரை தமிழகத்தில் நடைபெறாத அளவில் மிக பிரம்மாண்டமான முறையில் 2017 ஜனவரி 3 ஆம் தேதி போக்குவரத்து ஆணையர் அலுவலகம் முற்றுகையிடப்பட்டு அன்றைய போக்குவரத்து ஆணையர் தயானந்தா கட்டாரியா IAS அவர்களிடம் பேச்சுவார்த்தை நடைபெற்றது போக்குவரத்து ஆணையரிடம் நடைபெற்ற பேச்சுவார்த்தை தோல்வியடைந்தது.

அனைத்து ஓட்டுநர்களும் சாலை மறியலில் ஈடுபட்டனர் இதை கவனித்த அன்றைய சென்னை பெருநகர காவல் கிழக்கு இணை ஆணையர் மனோகரன் அவர்கள் ஓட்டுனர்களை சமாதானப்படுத்தி போக்குவரத்து கூடுதல் ஆணையர் மற்றும் போக்குவரத்து இணை ஆணையர் களை சாலைக்கு வரவழைத்து பேச்சுவார்த்தை நடத்தி சுமூக உடன்பாடு எட்ட வழிவகை செய்தார் இந்தப் போராட்டத்தில் அன்றைய வடசென்னை மாவட்ட செயலாளர் கோபிகிருஷ்ணன் அவர்களும் அவரது நண்பர் பாஸ்கர் அவர்களும் காவல் துறையால் கைது செய்யப்பட்டு சைதாப்பேட்டையில் சப் ஜெயிலில் அடைக்கப்பட்டனர் பின்னர் நான்கு தினங்கள் கழித்து அவர்கள் சங்க நிர்வாகிகள் முயற்சியால் ஜாமினில் எடுக்கப்பட்டனர் வழக்கு இன்றுவரை முடியாமல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

## முத்துகுமார் மற்றும் மணிகண்டன் தற்கொலைக்கு நீதி கேட்டு.

நமது சங்கம் ஓட்டுநர்களை ஒருங்கிணைத்து கூட்டமைப்பு சங்கங்களுடன் வீர நடை போட்டுக் கொண்டிருந்தது அந்த நேரத்தில் நாம் மேலே குறிப்பிட்டது போல் ஓட்டுநர்களுக்கு ஏதாவது பிரச்சனை என்றால் குரல் கொடுக்க கேள்வி கேட்க உரிய அமைப்பு இல்லை என்ற எண்ணத்தில் சில அரசுத்துறை அதிகாரிகள் காவல்துறையினர் ஓட்டுநர்கள் என்றாலே மரியாதை இல்லாமல் பேசுவது நையப்புடைப்பது போன்ற நோக்கில் செயல்பட்டுக் கொண்டிருந்தனர் அந்த சூழ்நிலை காலத்தில் உபேர் நிறுவனத்தில் தனது காரை இயக்கி வந்த முத்துக்குமார் என்ற ஓட்டுனர் ஏர்போர்ட்டில் உபேர் நிறுவன ஊழியர்களுடன் ஏற்பட்ட பிரச்சனையில் காவல்நிலையம் அழைத்து செல்லப்படுகிறார் அப்போது ஏர்போர்ட்டில் உள்ள உபேர் பூத்தை முத்துக்குமார் தாக்கியதாகவும் அந்த பூத்தை சரி செய்யும் வரை வாகனத்தை ஏர்போர்ட் காவல் நிலையத்தில் நிறுத்தி வைத்திருக்க வேண்டும் என்றும் அன்றைய ஆய்வாளர் கூறிய காரணத்தினால் வீட்டிற்கு உரிய வருமானமின்றியும் குழந்தைக்கு பால் கூட

வாங்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டார் முத்துக்குமார் மிகவும் மன வருத்தத்தில் இருந்த முத்துக்குமார் தனது வீட்டின் அருகில் இருந்த ரயில்வே டிராக்கில் தற்கொலைக்கு முயன்றார் அதில் இரண்டு கால்களும் துண்டிக்கப்பட்ட நிலையில் சென்னை ரஜிவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் அதற்காக கூட்டமைப்பு சங்கங்கள் ஒருங்கிணைந்து சென்னை கிண்டி லீ ராயல் மெரிடியன் ஹோட்டல் அருகில் சாலை மறியல் ஈடுபட்டதற்க்காக கைது செய்யப்பட்டனர் பின்பு அனைத்து தொழிற் சங்கங்களும் இணைந்து கூட்டமைப்பின் சார்பில் முத்துக்குமார் உடலை ஊருக்கு எடுத்து செல்ல ஆம்புலன்ஸ் ஏற்பாடு செய்து கொடுத்தனர் பின்பு அந்த குடும்பத்திற்கு 50 ஆயிரம் ரூபாய் கூட்டமைப்பின் சார்பில் உதவி வழங்கப்பட்டது.

இந்த சம்பவம் நடைபெற்று சில நாட்களிலேயே தாமரைக்கண்ணன் என்ற போக்குவரத்து உதவி ஆய்வாளர் தரமணியில் மணிகண்டன் என்ற ஓட்டுனரை தகாத வார்த்தைகளால் திட்டியதால் மனமுடைந்த மணிகண்டன் பெட்ரோலை ஊற்றி தீ வைத்துக் கொண்டார் உடனடியாக களம் கண்ட நாம் நேரில் சென்று மணிகண்டனை விசாரித்து அவர்கள் குடும்பத்தாருக்கு தகவல் அளித்து அடுத்த நாள் சென்னை பெருநகர காவல்துறை ஆணையரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கான ஏற்பாடுகளை J. மைதீன் அவர்களின் வாயிலாக ஏற்படுத்தி கொடுத்தோம் நமது சங்க நிர்வாகிகளுடனும் மணிகண்டனின் குடும்பத்தாருடனும் பேச்சுவார்த்தை நடத்திய காவல்துறை ஆணையர் மற்றும் காவல் கூடுதல் போக்குவரத்து ஆணையர் நமது கோரிக்கைகளை பரிசீலனை செய்து தாமரைக்கண்ணன் உதவி ஆய்வாளரை அன்று மாலையே தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டார் ஒரு சில தினங்களில் மணிகண்டன் சிகிச்சை பலனின்றி இறந்தார் மணிகண்டனின் குடும்பத்தாருக்கும் கூட்டமைப்பு சங்கங்களின் சார்பாக பொருளாதார உதவி செய்யப்பட்டது இந்த விஷயத்தில் சங்கத்தின் பொதுச் செயலாளரான என் மீது காவல் நிலையத்தில் 107 பிரிவின் கீழ் அனுமதியின்றி போராட்டங்களை ஒருங்கிணைக்க கூடாது என்று வழக்கு பதிவு செய்யப்பட்டு காவல் நிலையத்திலேயே ஜாமினில் விடுவிக்கப்பட்டேன்

## முதல் வெளிமாவட்ட பொதுக்குழு திருச்சியில்.

அடுத்த கட்டமாக தமிழகம் முழுவதும் சங்கத்தை வலுப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் சங்க நிர்வாகிகள் நகர்ந்தனர் அந்த சூழ்நிலையில் 27 - மார்ச் - 2018 அன்று தென் மாவட்ட நிர்வாகிகளை ஒருங்கிணைத்து திருச்சி மாவட்டத்தில் முதன் முதலாக சென்னையைத் தாண்டி சங்கத்தின் திருச்சி மாவட்ட பொதுக்குழு மற்றும் தென் மண்டல நிர்வாகிகள் சந்திப்பு சிறப்பாக நடைபெற்றது இதில் தென் மாவட்டங்களைச் சார்ந்த சில நிர்வாகிகள் கலந்து கொண்டனர் அன்று திருச்சி பொதுக்குழு

கூட்டத்தில் 100க்கும் மேற்பட்ட ஓட்டுநர்கள் கலந்துகொண்டு சங்கத்தில் இணைந்தனர் சென்னையை தாண்டி சங்கம் துவங்கப்பட்ட முதல் மாவட்டம் என்ற பெருமையை திருச்சி மாவட்டம் தட்டிச் சென்றது.

சென்னை திரும்பிய நிர்வாகிகள் ஓட்டுநர்களின் வாழ்வாதார பிரச்சனையான கால் டாக்ஸி களுக்கு மீட்டர் கட்டணம் என்ற பிரச்சனையை கையில் எடுத்தனர் அதை கண்டித்து ஓலா அலுவலகம் முன்பு காத்திருக்கும் போராட்டம் கால் டாக்ஸி களுடன் போக்குவரத்து ஆணையர் அலுவலகம் முன்பு காத்திருக்கும் போராட்டம் பைக் கட்சிகளுக்கு எதிராக போராட்டம் மாபெரும் வேலை நிறுத்தங்கள் என வாழ்வாதார பிரச்சினைகளை முன்வைத்து போராட்ட களத்திலேயே பல மாதங்கள் ஓடி சென்றன இத்தகைய சூழ்நிலையிலும் சங்கத்தின் கட்டமைப்பை வலுப்படுத்தும் விதமாக அண்ணன் பிரபாகரன் அவர்கள் வெளிமாவட்ட சங்கத்தின் வளர்ச்சியில் முழு கவனம் செலுத்தினார்கள்.

## <u>சேலத்தில் முதல் மாநில செயற்குழு.</u>

அண்ணன் பிரபாகரன் மற்றும் சேலம் ராஜா அவர்களின் முயற்ச்சியாலும் **2018** இறுதியில் சேலம் மாவட்டத்தில் மாவட்ட பொதுக்குழு மாநில செயற்குழு கூட்டமும் நடைபெற்றது அந்தச் செயற்குழுவில் திருச்சி மாவட்ட செயலாளராக இருந்த அன்பு சகோதரர் சபரிநாதன் அவர்கள் மாநில துணைப் பொதுச் செயலாளராகவும், தென் சென்னை மாவட்ட பொருளாளர் அண்ணன் காளிமுத்து அவர்கள் தலைமை நிலைய செயளாலராகவும் பொறுப்புகளுக்கு நியமனம் செய்யப்பட்டார்.

அதன் பின்பு சங்கத்தின் வளர்ச்சியில் முழு கவனம் செலுத்திய மாநில மற்றும் மாவட்ட நிர்வாகிகள் பணிகளை சிறப்பாக செய்தனர் அதன் காரணமாக அடுத்து திண்டுக்கல் மாவட்ட பொதுக்குழு, வேலூர்&திருவண்ணாமலை மாவட்ட பொதுக்குழு, கரூர் மாவட்ட பொதுக்குழு, மதுரை மாவட்ட பொதுக்குழு, புதுக்கோட்டை மாவட்ட பொதுக்குழு, விழுப்புரம் மாவட்ட பொதுக்குழு என்று சங்கம் தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களையும் சென்று அடைந்து கொண்டிருந்தது அனைத்து மாவட்டங்களிலும் நிர்வாகக் கட்டமைப்பை வலுப்படுத்தவும் அடுத்தடுத்த மாவட்டங்களில் சங்கத்தை வளர்த்தெடுப்பதிலும் மாநில நிர்வாகிகள் தங்கள் பங்களிப்பை முழுமையாக செலுத்தினர் அவர்களுக்கு உறுதுணையாக அனைத்து மாவட்ட நிர்வாகிகளும் செயலாற்றினர்.

## <u>சென்னையில் மீண்டும் ஓர் தற்கொலை.</u>

நமது சங்கத்தின் பல்வேறு முயற்சிகளாலும் கூட்டமைப்பு சங்கங்களின் பல்வேறு நடவடிக்கைகளாளும் காவல்துறை அதிகாரிகள் ஓட்டுநர்களிடம் அன்பான முறையிலும் அவர்களின் வேதனைகளைப் புரிந்து கொண்டவர்களாகவும் நல்ல முறையில் காவல் துறையினர் நடந்து

கொண்டனர் அப்போது அண்ணா நகரில் காவலர் ஒருவர் தம்மை கடுமையாகத் திட்டியதாகவும் மன உளைச்சலுக்கு உள்ளாக்கியதாகவும் வீடியோ பதிவு செய்து வைத்துவிட்டு ரயில் முன்பாய்ந்து ராஜேஷ் என்ற ஓட்டுனர் தற்கொலை செய்து கொண்டார் இந்த செய்தி சன் நியூஸ் தொலைக்காட்சி வழியாக நமக்கும் ஓட்டுநர்களுக்கும் ஒரு வாரம் கழித்து தெரியவந்தது அவர் அண்ணாநகர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட காவலர்கள் தன்னை மன உளைச்சலுக்கு உள்ளாக்கியதாக வீடியோ பதிவில் பதிவிட்டு இருந்ததை தொடர்ந்து திருமங்கலம் காவல் நிலையத்தை முற்றுகையிட்ட நமது சங்கத்தினர் மற்றும் பல்வேறு சங்கத்தினர் ராஜேஷ் அவர்களின் குடும்பத்தாரை அழைத்து வந்து காவல் மேற்கு இணை ஆணையர் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வழக்கை துரிதப்படுத்தினர் பின்னர் ராஜேஷ் அவர்களின் குடும்பத்தினருக்கு பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட சங்கங்களின் சார்பாக பொருளாதார உதவி செய்யப்பட்டது.

## <u>ஓலா அலுவலகம் தொடர் முற்றுகையும் 23 போர் கைதும்</u>.

இத்தகைய நாட்களில் தான் மீண்டும் சென்னையில் ஓலா நிறுவனத்தின் அட்டூழியம் தலை விரித்து ஆடியது அந்தச் சூழ்நிலையில் ஓலா நிறுவனத்தை முற்றுகையிட சென்ற நமது சங்க நிர்வாகிகள் தலைமையிலான கூட்டமைப்பினர் ஓலா நிறுவனத்தில் 4 நாட்களுக்கும் மேலாக தொடர் உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர் தொடர்ந்து 4 நாட்களாக எந்த ஒரு கோரிக்கைகளுக்கும் செவி சாய்க்காத ஓலா நிறுவனத்தை கண்டித்து கொதிப்படைந்த ஓட்டுனர்கள் ஈக்காட்டுத்தாங்கல் ஜெயா டிவி அருகில் 100 அடி சாலையில் வாகனங்களை நிறுத்தி சாலை மறியலில் ஈடுபட்டனர் இந்தப் போராட்டம் தொலைக்காட்சிகளில் லைவ் செய்திகளாக ஒளிபரப்பப்பட்டது பின்னர் அனைவரும் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு மண்டபத்தில் அடைக்கப்பட்டனர் இந்தப் போராட்டத்தில் பெரும் பங்காற்றிய நமது தொழிற்சங்கத்தை சார்ந்த தலைவர் பொதுச் செயலாளர் பொருளாளர் உட்பட 16 நபர்களும் மற்ற 4 சங்கங்களை சார்ந்த 7 நபர்களும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர் பின்னர் வெளியில் இருந்த நமது சங்கத்தினுடைய நிர்வாகிகள் உறுப்பினர்கள் கூட்டமைப்பு சங்கத்தினர் முயற்சிகளால் மூன்று தினங்கள் கழித்து அனைவரும் சிறையிலிருந்து வெளி வந்தோம் நாங்கள் சிறை இருக்கும் போது எங்களுக்காக அயராது பாடுபட்ட அனைத்து நல் உள்ளங்களுக்கும் இந்த நேரத்தில் நன்றி பாராட்ட கடமைப்பட்டுள்ளோம் 23 நபர்கள் மீதும் வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

நாம் கைது செய்யப்பட்டதில் இருந்து ஓலா நிறுவனம் தொடர்ந்து சென்னையில் மூடப்பட்டிருந்தது பின்பு நாம் ஜாமீனில் வெளியே வந்தவுடன் ஓலா நிறுவனம் கூட்டமைப்பு நிர்வாகிகளுடன் சுமூக பேச்சுவார்த்தை நடத்துவதற்கான ஏற்பாடுகளை செய்தது தொடர்ந்து ஒரு வார காலமாக

நீடித்துக் கொண்டிருந்த பேச்சுவார்த்தையில் ஓலா வின் தலைமை அலுவலகத்திலிருந்து முக்கிய அதிகாரி ஒருவர் வந்து பேச்சுவார்த்தை யில் ஈடுபட்டார் சுமூக உடன்பாடு எட்டப்பட்டது பின்பு சென்னையில் ஓலா அலுவலகம் பத்து நாட்களுக்கு அப்புறம் மீண்டும் திறக்கப்பட்டு செயல்பாட்டிற்கு வந்தது இதுவே முதன் முறையாக ஓலா அலுவலகம் அதிகப்படியான நாட்கள் மூடப்பட்டு காவல்துறையின் கட்டுப்பாட்டில் இருந்தது என்பது வரலாறு அதே காலகட்டத்தில் பல்வேறு மாவட்டங்களில் பைக் டாக்ஸி நிறுவனங்களின் அட்டூழியம் தலைவிரித்தாடியது அதற்கெதிராக நமது திருச்சி மதுரை மாவட்ட நிர்வாகிகள் களம் கண்டு போக்குவரத்து துறை அதிகாரிகளுடன் அந்த நிறுவனங்களின் மீது நடவடிக்கைகளை மேற்கொண்டனர் அப்போது திருச்சி மதுரை சென்னை என அனைத்து மாவட்டங்களிலும் பைகள் பறிமுதல் என நமது சங்கத்தின் பெயர் தினமும் நாளிதழ்களில் இடம்பெற்றது அதே காலகட்டத்தில் ஓன் போர்டு பிரச்சனைகள் பல மாவட்டங்களில் தலைவிரித்தாடிய போது திண்டுக்கல் மாவட்டம் அதற்க்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டது குறிப்பாக பழனி பகுதியில் ஓன் போர்டு கார்களை வைத்து யாரும் சவாரி ஓட்ட முடியாது என்ற நிலையை இன்றைக்கு நமது சொந்தங்கள் உருவாக்கியிருக்கின்றனர்.

அதைத்தொடர்ந்து நமது சங்கத்தின் வளர்ச்சிகள் அனைத்து மாவட்டங்களையும் தொட்டது குறிப்பாக பெரம்பலூர் மாவட்ட பெயர்பலகை திறப்புவிழா, ஈரோடு மாவட்ட கூட்டம், தூத்துக்குடி வடக்கு மாவட்ட கூட்டம், தூத்துக்குடி தெற்கு மாவட்ட கூட்டம், விருதுநகர் மாவட்ட இருபெரும் விழா, தஞ்சை மாவட்ட கூட்டம், திருவாரூர் மாவட்ட கூட்டம், திருநெல்வேலி முப்பெரும் விழா ஆகிய மாவட்ட நிகழ்வுகளிலும் தலைமை நிர்வாகிகள் நேரடியாக கலந்துகொண்டு அந்தந்த மாவட்டத்தினுடைய வளர்ச்சிகளுக்கு வழிவகுத்தனர் இதையும் தாண்டி தலைமை நிர்வாகிகள் இதுவரைக்கும் பயணிக்காத பல மாவட்டங்களும் சிறப்பாக செயல்பட்டு கொண்டிருக்கின்றன அந்த மாவட்டங்களின் வளர்ச்சிக்காகவும் மாநில மாநாடு முடிந்தவுடன் தலைமை நிர்வாகிகள் நிர்வாக சுற்றுப்பயணம் மேற்கொண்டு அனைத்து மாவட்ட நிர்வாகிகளின் ஒத்துழைப்புடன் தமிழகம் முழுவதும் உரிமை குரல் ஓட்டுநர் தொழிற்சங்கம் இல்லாத ஊரே இல்லை என்ற நிலையை ஏற்படுத்தும் விதமாக செயல்பட இலக்கை நிர்ணயித்து உள்ளனர்.

**<u>சங்கத்தில் செயல்படும் அனைத்து மாவட்டங்களின் பெயர்கள்.</u>**

வடசென்னை மாவட்டம், தென் சென்னை மாவட்டம், மத்திய சென்னை மாவட்டம், செங்கல்பட்டு கிழக்கு, செங்கல்பட்டு வடக்கு, திருவள்ளூர் மாவட்டம், ஆட்டோ வடசென்னை, ஆட்டோ தென்சென்னை, ஆட்டோ திருவள்ளூர் மாவட்டம், திருச்சி மாவட்டம், கரூர் மாவட்டம்,

திண்டுக்கல் மாவட்டம், சேலம் மாவட்டம், மதுரை மாவட்டம், ஈரோடு மாவட்டம், வேலூர் மாவட்டம், திருவண்ணாமலை மாவட்டம், புதுக்கோட்டை மாவட்டம், நாமக்கல் மாவட்டம், நீலகிரி மாவட்டம், தேனி மாவட்டம், பெரம்பலூர் மாவட்டம், அரியலூர் மாவட்டம், தஞ்சை மாவட்டம், திருப்பூர் மாவட்டம், விருதுநகர் மாவட்டம், விழுப்புரம் மாவட்டம், கடலூர் மாவட்டம்,கோவை மாவட்டம், நாகை மாவட்டம், திருவாரூர் மாவட்டம், தூத்துக்குடி மாவட்டம் தெற்கு, தூத்துக்குடி மாவட்டம் வடக்கு, நெல்லை மாவட்டம், குமரி மாவட்டம், ராமநாதபுரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி மாவட்டம், தென்காசி மாவட்டம், சிவகங்கை மாவட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் இந்த அறிக்கையை வாசித்த, மாநில மாநாட்டில் கலந்து கொண்ட அனைத்து நல்லுள்ளங்களுக்கும் உரிமை குரல் ஓட்டுநர் தொழிற்சங்கத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகள் பல்வேறு பணிகள் காரணத்தினாலும் மாநாட்டு பணிகள் அதிகமாக இருந்த காரணத்தினாலும் சங்கத்தின் 4 ஆண்டுகால வரலாற்றை புத்தகமாகவே எழுதி இருக்கலாம் ஆனால் 4 நாட்களில் எழுத வேண்டிய கட்டாயத்தின் காரணத்தினால் சில பக்கங்கள் மட்டுமே அறிக்கையாக எழுத முடிந்தது. நிச்சயமாக இந்த மாநாட்டு அறிக்கை விரைவில் உரிமை குரல் ஓட்டுநர் தொழிற்சங்கத்தின் வரலாறு என்ற புத்தகமாக விரிவாக வெளியிடப்படும்.

நன்றி.....

**அனைத்து தலைமை நிர்வாகிகள்**